அடுத்து என்னுடைய தொகுதியான தள்ளியிலே கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரி கிடையாது. எனவே ஆஸ்பத்திரி ஒன்றை அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள விவசாயிகள் மின்சார இணைப்பு கொடுக்கவேண்டும் என்று 10, 12 வருடங்களுக்கு முன்பாக அப்ளிகேஷன் போட்டும் கூட, இன்னும் மின்சார இணைப்புத் தரவில்லை. எனவே மின்சார இணைப்பையும் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் சரியான பஸ் வசதி கிடையாது. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பஸ் டெப்போ ஒன்றை அமைத்து, தற்போது 4 பஸ்களைத்தான் விட்டிருக்கிறார்கள். எனவே அதிக பஸ்களை விடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே சாலை பிரச்சினை மின்சார பிரச்சினை, மற்றும் தண்ணீர் பிரச்சனை போன்று நிறைய பிரச்சனைகள் இருக்கின்றன. மேலும் அஞ்செட்டியிலே ஒரு காவல் நிலையத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் தெக்கட்டி என்ற ஒரு ஏரி இருக்கிறது. அதை மராமத்து செய்வதற்காக 66 லட்சத்திற்கு மோலக எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டேன். அதற்கும் ஆவன செய்யுமாறு நான் கேட்டுக்கொள் கிறேன். மேலும் என்னுடைய தொகுதியிலே காரண்டப்பள்ளி பஞ்சாயத்திலே முனகனப்பள்ளி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கேயும் ஒரு ஏரி இருக்கிறது. 10 வருஷத்திற்கு முன்பு சாங்ஷன் ஆகியும் இன்னும் மராமத்துப்பணி பெண்டிங்கிலே இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

எனக்கு தமிழ் சரியாக வராது. நான் தெலுங்குதான் படித்து இருக்கிறேன். எனக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6-3-1987) காலை **10.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.**

பின்னர் பேரவை இரவு 7.57 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

7, பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

8. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) சமூக நலத்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்(